# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு. சி. மதிவாணன், பி.இ.,**
**திட்ட அனுமதி**
**நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்**

ந.க.எண். 3084 / 2016 / உ.திகு- 2 நாள்: **20.02.2017**
தி.அ. எண். 21 (அ முதல் ஏ) /2017
உள்ளாட்சியின் பெயர்: நீலாம்பூர் ஊராட்சி

பொருள் : திட்ட அனுமதி – கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - நீலாம்பூர் ஊராட்சி/கிராமம் - நிலஅளவு எண் 722/3பாகம், 4Bபாகம், 5, 6, 723/1B, 2, 3A, 4B, 726/1A, 2A – மனைப்பரப்பு 12371.43சமீ-ல் மனையிட ஒப்புதல் மற்றும் ஸ்டில்ட் + 4 தளங்களில் 108குடியிருப்புகள், Gym, Club House & Swimming Pool உபயோக கட்டிடத்திற்கு திட்டஅனுமதி வழங்கிட நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள் இசைவு பெறப்பட்டது – திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண் 14600/2016/பிஏ1 நாள் 26.12.2016.
2. மனுதாரர் திரு. பி.கே. சௌமியா நாராயணன் M/S XS Real Properties Pvt Ltd, கோயம்புத்தூர் அவர்கள் கடிதம் நாள் 31.05.2016.
3. தலைவர், நீலாம்பூர் ஊராட்சி, சூலூர் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் கடிதம் நாள் 11.11.2014.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் எண் 17594/2013/Special Cell, நாள் 30.10.2013.
5. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண் 4,நாள் 31.01.2017.
6. மனுதாரர் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தப்பட்ட நாள் 14.02.2017.

**உத்திரவு:**

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், நீலாம்பூர் ஊராட்சி/கிராமம், நிலஅளவு எண் 722/3பாகம், 4Bபாகம், 5, 6, 723/1B, 2, 3A, 4B, 726/1A, 2A-ல் அமையும் 12371.43சமீ பரப்பு கொண்ட மனைக்கு **"A to O"** என எல்லையிட்டும், வரைபடத்திற்கு க.வ/நஊஇ எண் **217/2016** என எண்ணிட்டு பார்வை 1-ல் கண்டுள்ள கடிதம் மூலம் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து உத்தேச மனையிடத்திற்கு நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் மனை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இம்மனையிடத்தில் அமையும்,

**கட்டிட பரப்பு விவரம்** : **மனையின் பரப்பு** : 12371.43சமீ

| தளங்கள் | FSI பரப்பு சமீ-ல் | Non-FSI பரப்பு சமீ-ல் | மொத்தப் பரப்பு சமீ-ல் | உபயோகம் |
|---|---|---|---|---|
| ஸ்டில்ட் தளம் | - | 2267.67 | 2267.67 | வாகன நிறுத்துமிடம் |
| முதல் தளம் | 1549.75 | 226.97 | 1776.72 | 26 குடியிருப்புகள் + Gym |
| இரண்டாம் தளம் | 1695.98 | 76.51 | 1772.49 | 26 குடியிருப்புகள் + Club House |
| மூன்றாம் தளம் | 1664.65 | 82.04 | 1746.69 | 28 குடியிருப்புகள் |
| நான்காம் தளம் | 1664.65 | 82.04 | 1746.69 | 28 குடியிருப்புகள் |
| டெரஸ் தளம் | - | 72.45 | 72.45 | - |
| நீச்சல் குளம் | 88.32 | - | 88.32 | - |
| மொத்தப்பரப்பு | 6663.35 | 2807.68 | 9471.03 | 108 குடியிருப்புகள் + Gym + Club House |

கொண்ட கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி எண்.21(அ முதல் ஏ வரை)/2017 என்ற எண்ணில் 20.02.2017 முதல் 3 (மூன்று) வருட காலத்திற்கு கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

**பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள் நடவடிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.**

## சிறப்பு நிபந்தனை-1

1. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும பொது ஒதுக்கீடு திறவிடங்கள் அதற்கான அணுகுவழி ஆகியவற்றை நிறுவனத்தினா் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
3. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building rules under the local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects /licensed surveyors and the structural engineer associated with the development shall ensure the developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
4. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணபத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணபதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
5. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்.
6. The provision in the G.O.(ms) No. 17 H & UD (UD 4) (3) department dated 5.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

## பொது நிபந்தனைகள்

1. திட்டஅனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)- கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)-ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு ஆணையர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.
3. கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு (i) திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ., (ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. (i) அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும். (ii) குளியல் அறை மற்றும் Wash Basin கழிவுநீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

5. சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating System) அமைக்கப்பட வேண்டும்.

6. மனையில் கட்டிடம் கட்டும்போது Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும்.

7. (i) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும். (ii) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும் (iii) உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய சட்டம் பிரிவு 25 (Water Act) -ன்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.

8. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.11.2004-ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.

9. கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

10. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத்தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

11. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தம்சொந்த செலவில் செய்துதர வேண்டும்.

12. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

13. The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

14. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

15. கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

16. கோயம்புத்தூர் பகுதியானது Seismic Zone - III ஆக வரையறுக்கப்பட்ட பகுதியில் அமைவதால் கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

17. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு/ வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (நீலாம்பூர் ஊராட்சி உட்பட)பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

18. நீலாம்பூர் ஊராட்சி எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு / மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

19. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்-2

1. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

2. The Provisions in the G.O.(Ms). No. 17, H & UD (UD 4(3), Department, dated 05.02.2016, relating to installation and use of Solar energy system, should be followed.

திட்ட அனுமதி செயலாணை கடிதத்தினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

23/2/2017

உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர் - 12.

22/2/17

**இணைப்பு**

முத்திரையிட்ட வரைபடம் - 2 தொகுப்பு

**பெறுநர்**

தலைவர்/செயல் அலுவலர்,
நீலாம்பூர் ஊராட்சி,
சூலூர் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

**நகல்** (உள்ளாட்சி வழியாக)

M/S XS Real Properties Pvt Ltd.,
எண் 362, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயம்புத்தூர்-641043.

நீலம்பூர்(முதல்நிலை)ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை – திருமதி.பி.ஜெயஸ்ரீ B.sc.,

ந.க.எண் – 1557/2016
கட்டிட அனுமதி எண் – 44/2016-17

நாள் – 13.03.2017

பொருள் – கட்டிடங்கள் – திட்ட அனுமதி – நீலம்பூர் ஊராட்சி – நீலம்பூர் கிராமம் – தி/ள் – XS Real Properties Private Limited – க.ச.எண் – 722/3பாகம், 4Bபாகம்,5,6,723/1B, 2, 3A, 4B, 726/1A, 2A – மனைப்பரப்பு 12371.43 ச.மீ–ல் மனையிட ஒப்புதல் மற்றும் ஸ்டில்ட் + 4 தளங்களில் 108 குடியிருப்புகள், Gym,Club House & Swimming Pool உபயோக கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்கிட கோயம்புத்தூர் உள்ளூர் திட்டகுழும உறுப்பினர் செயலர் உத்திரவு பெறப்பட்டது – திட்ட அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை – கோயம்புத்தூர் உள்ளூர் திட்டகுழும உறுப்பினர் செயரல் (பொ) அவரகளின் நடவடிக்கைகள் ந.க.எண் – 3084/2016/உதிகு – 2 நாள் – 20.02.2017

உத்திரவு:–

சூலூர் ஊராட்சி ஒன்றியம் நீலம்பூர் ஊராட்சிக்குட்பட்ட க.ச.எண் – 722/3பாகம், 4Bபாகம் 5,6,723/1B, 2, 3A, 4B, 726/1A, 2A மனைப்பரப்பு 12371.43 ச.மீ–ல் மனையிட ஒப்புதல் மற்றும் ஸ்டில்ட் + 4 தளங்களில் 108 குடியிருப்புகள், Gym,Club House & Swimming Pool உபயோக கட்டிடத்திற்கு திட்ட அனுமதி பார்வையில் காண் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டகுழும உறுப்பினர் செயலர்(பொ) அவர்களிடமிருந்து திட்ட அனுமதி உத்திரவு பெறப்பட்டுள்ளது.மேலும் இத்துடன் இணைக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி 9471.03 ச.மீட்டர் பரப்பளவுள்ள 108 குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கும்,மேலும் 3.05 ஏக்கர் மனையிட ஒப்புதலும் தி/ள் – XS Real Properties Private Limited என்பவருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கட்ட அனுமதி அரசாணை(நிலை)எண் – 255, ஊரக வளர்ச்சி(சி2)துறை நாள் – **18.08.1997**ன்படி 13.03.2017 முதல் 12.03.2019 வரை (இரண்டு வருடங்களுக்கு) வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள் –

1.கட்டிடம் கட்டுவது வரைபடத்தில் குறிப்பட்டுள்ள அளவுக்கு அதிகமாகவோ அல்லது மாறுபட்டோ இருக்கக்கூடாது.

2.உபயோகிக்கும் நீர் எவ்விதத்திலும் தேங்காதவாறு வசதிகள் செய்யப்பட வேண்டும்.

3.எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் தவிர வேறு காரணத்திற்காக கட்டிடம் உபயோகப்படுத்தக்கூடாது.

4.மனையின் எல்லைப் பகுதி கட்டிடப் பரப்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் உயர்மட்டத்தில் இருந்து 5 அடி அல்லது 1.52 மீட்டர் உயரத்திற்குட்படாத கற்சுவர் அல்லது வேலி தவிர எவ்வித கட்டிடசுவரோ கட்டக்கூடாது

5.ஒவ்வொரு குடியிருப்பு வீட்டிற்கும் எல்லைப்பகுதிக்கும் இடையே குறைந்தது 5 அடி அல்லது 1.82 மீட்டர் அளவு திறந்தவெளிவிடப்பட வேண்டும்.

6.மனையில் திறந்தவெளி இருக்கும் பகுதியில் சுகாதாரத்துடன் திறந்தவெளியை பேணப்பட வேண்டும்.

7.கடைக்கால் தோண்டவும், நிலத்தை சமன்படுத்தவும் தவிர வேறு காரணங்களுக்காக மனையில்திறந்தவெளியில் குழிகள்தோண்டவோ, பள்ளங்கள் ஏற்படுத்தவோ கூடாது

8.மனையின் முன்புறத்தில் அல்லது பின்புறத்தில் ஏதாவது மரம் நட்டு பேணி காக்க வேண்டும்.

9.அனுமதிக்கப்பட்ட கால வரையானது இவ்வுத்திரவு இடப்படும் தேதியில் இருந்து 24 மாதங்கள் ஆகும்.அதற்குள்கட்டி முடிக்கப்படாவிட்டால் உரிய கட்டணத்தில் ஐந்தில் ஒரு பாகம் அல்லது ஊராட்சியில் விதிக்கும் தொகையினை செலுத்தி புதிதாக மனு செய்து காலத்தில் நடத்த அனுமதி பெற வேண்டும்.

10.அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் மாறுதல் தேவைப்படின் உரிமை அமலில் இருக்கும் காலத்திற்குள்புதிய வரைபடம் தயாரித்து ஒப்படைத்து புதிய அனுமதி பெற வேண்டும்.

11.கட்டிடம் கட்டப்பட்டவுடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி, கட்டிட உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கட்டிடம் அதன் தேதி, முதலியவற்றை உடன் ஊராட்சி நிர்வாகத்திற்கு தெரிவித்து கட்டிட வரி விதிப்பதற்கு உட்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

12.கட்டிடத்தில் தீ விபத்து ஏற்படாதவாறு பாதுகாப்பு செய்வதிலும் சுற்றுப்புற சூழ்நிலை சுகாதாரத்திலும் பேணி காப்பது உரிமையாளர்களின் கடமையாகும்.

13.மழைநீர் சேகரிப்பு வடிகால் அமைத்தல் வேண்டும்.

14.அரசினால் அவ்வபொழுது உத்திரவிடப்படும் சகலவிதமான உத்திரவுகளுக்கும் மனுதாரர் கட்டுபட்டு நடக்க வேண்டும்.

15.இந்த அங்கீகாரம் தவறான முறையில் பெறப்பட்டதாகவோ அல்லது தவறுதலுக்கு இடம் கொடுக்ககூடியதாக இருக்குமானால் நீலம்பூர் ஊராட்சி நிர்வாகத்திற்கு தோன்றும் உசிதமான காரணத்தை கொண்டு இந்த கட்டிட அனுமதியை ரத்து செய்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ உட்பட்டதாகும்.

16.கோயம்புத்தூர் உள்ளூர் திட்டகுழும உறுப்பினர் செயலர்(பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் -3084/2016/உதிகு – 2 நாள் – 20.02.2017ன்படி கூறப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

17.அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் கட்டிடம் கட்டும் பகுதியில் பார்வைக்கு கட்டிடம் கட்டப்படும் வரை வைத்திருத்தல் வேண்டும்.

18.மேற்கூரிய நிபந்தனைகள் மீறினால் அதனால் ஏற்படும் சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் விண்ணப்பதாரரே முழு பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு ஊராட்சி நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

பெறுநர்:-
திரு. XS Real Properties Private Ltd
நீலம்பூர்,

13/3/17
Special Officer
Neelambur Village Panchayat

13/3/2017



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate